**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 477/2023**

**வா.சா.1**

**திரு. அஜோய்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

பிரதிவாதி ஆசிரியர் என்றால் சரிதான். வங்கியின் வட்டி விகிதமானது 7.5 சதவீதம் என்றால் சரியல்ல 11.10 சதவீதம். நான் கேட்டுள்ள வட்டி விகிதம் அதிகமானது என்றும், அது ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலும், விதிமுறைகளுக்கும் முரணானது என்றால் சரியல்ல. கடன் தொகையானது 72 மாதத் தவணைகளில் செலுத்தவேண்டும் என்ற விபரத்தை பிரதிவாதிக்கு வங்கி கூறவில்லை என்றால் சரியல்ல. மாதத்தவணை சரியாக செலுத்தவில்லை என்றால் 2 சதவீத அபராத வட்டி செலுத்தவேண்டும் என்ற விபரத்தை பிரதிவாதிக்கு கூறவில்லை என்றால் சரியல்ல. கடன் தொகை செலுத்துவது தாமதமானதால் அதிகமான செலவுத் தொகை நாங்கள் கேட்கிறோம் என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் என்ன வட்டி சதவீதம் நாங்கள் குறிப்பிட்டுள்ளோமோ அந்த சதவீத வட்டிதான் தான் கேட்க இயலும் என்றும், அதற்கு கூடுதலாக வட்டி கணக்கீடு செய்ய இயலாது என்றால் சரியல்ல. அவ்வாறு கூடுதல் வட்டி கேட்கலாம் என்று காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வங்கியின் சார்பில்

பிரதிவாதியின் கடன் கணக்கை சரியாக பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கடன் கணக்கு விபரங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். வழக்குரையுடன் மேற்படி கணக்கு விபரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.19 ஆவணமானது நாங்கள் உரிய முறையில் பராமரிக்காமல் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி 17 மாதத்தவணை செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல 14 தான் செலுத்தியுள்ளார். மேற்படி 14 மாத தவணை செலுத்தியது குறித்து வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா மதிப்பீட்டு விவரம் தவறானது என்றால் சரியல்ல. 08-03-2023 மற்றும் 13-05-2023 தேதிகளில் பிரதிவாதியை எங்கள் வங்கி சார்பாக நேரில் சந்தித்ததாக கூறுவது பொய் என்றால் அறிவிப்பு தான் அனுப்பியுள்ளோம். பிரதிவாதி வா.சா.ஆ.12 மற்றும் 14 அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருக்கவில்லை என்றும், அவர் வால்பாறையில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான் ஆனால் அவரது நிரந்தர முகவரி உடுமலைப்பேட்டை. வழக்கில் கேட்டுள்ளவாறு வட்டி தொகை பெற அருகதையுடையவர் அல்ல என்றும், 7.5 சதவீத வட்டி தான் கேட்கமுடியும் என்றால் சரியல்ல. தாவாவை சரியான முறையில் மதிப்பீடு செய்யவில்லை என்பதாலும், அதிகமான வட்டி தொகை கேட்டுள்ளதாலும் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.